
# 2. நண்பரைக் கண்டுபிடி!



முயல் : நீங்களே கண்டுபிடியுங்களேன். நான்கு கால்கள் கொண்டவர்.

வாத்து : மாடுதானே?


முயல் : இல்லை. கூரான கொம்புகள் இருக்காது. பெரிய உருவம் கொண்டவர்.



2nd Std - Tamil Term 2 Updated 31.07.2020.indd 12 01-08-2020 12.29.46 PM

குரங்கு : ஓ... நான் சொல்லட்டுமா... யானைதானே?

முயல் : ஊகூம். நீண்ட தும்பிக்கை இருக்காது. வேகமாக ஓடுவார்.





கழுகு : எனக்குத் தெரியும். சிறுத்தைதானே?

முயல் : இல்லை. கருப்புப் புள்ளிகள் இருக்காது. நீண்ட கால்கள் இருக்கும்.

நரி : வரிக்குதிரையா?

முயல் : இல்லை. கருப்பு வெள்ளை வரிகள் இருக்காது. நீண்ட கழுத்தைக் கொண்டவர்.





2nd Std - Tamil Term 2 Updated 31.07.2020.indd 13
01-08-2020 12.29.46 PM



கிளி : ஐ! தெரிந்துவிட்டது.
ஒட்டகம்தானே?

முயல் : இல்லையே!
உருண்டையான திமில்
இருக்காது. உடலில்
கட்டங்கள் இருக்கும்.

அனைவரும் : ஓ! நாங்கள்
கண்டுபிடித்துவிட்டோம்.

புது நண்பர் வந்தார். விளையாட்டு தொடங்கியது.



புது நண்பர் யாரென்று உங்களுக்குத் தெரியும்தானே?

அவர் பெயரை எழுதுங்கள்.............................................................................



2nd Std - Tamil Term 2 Updated 31.07.2020.indd 14 01-08-2020 12.29.47 PM

# பயிற்சி

## படித்துப் பழகுக

கூரான கொம்புகள்  நீண்ட தும்பிக்கை

கருப்புப் புள்ளிகள்

உருண்டையான திமில்  கருப்பு வெள்ளை வரிகள்

## எழுதிப் பழகுக

நண்பர்  திமில்  தும்பிக்கை  கொம்புகள்

வரிகள்  ஒட்டகச்சிவிங்கி  கழுத்து

## பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

SBG31I

1. நீண்ட தும்பிக்கை உடையது யானை.
2. ஒட்டகச் சிவிங்கியின் முதுகில் திமில் இருக்கும்.
3. சிறுத்தையின் உடலில் கருப்பு வெள்ளை வரிகள் இருக்கும்.
4. வரிக்குதிரைக்குக் கொம்புகள் இல்லை.
5. மாட்டிற்குக் கூரான கொம்புகள் இருக்கும்.

## பொருத்துக

| | | |
|---|---|---|
| 1. நான்கு கால்கள், கூரான கொம்புகள் | – | ஒட்டகம் |
| 2. பெரிய உருவம், நீண்ட தும்பிக்கை | – | வரிக்குதிரை |
| 3. நீண்ட கால்கள், கருப்பு வெள்ளை வரிகள் | – | யானை |
| 4. நீண்ட கழுத்து, உருண்டையான திமில் | – | மாடு |

## வாய்மொழியாக விடை தருக

1. இக்கதையில் புது நண்பர் எவ்வாறெல்லாம் வருணிக்கப்படுகிறார்?

## விடை எழுதுக

1. உடலில் கருப்பு வெள்ளை வரிகளைக் கொண்ட விலங்கு எது?
2. புதிதாக வந்த நண்பர் யார்?



2nd Std - Tamil Term 2 Updated 31.07.2020.indd 15 01-08-2020 12.29.47 PM

## ஆதிரையின் பெட்டியில்...



இவள் ஆதிரை. சின்னச் சின்னப் பொருள்களைத் தேடித் தேடிச் சேர்த்து வைப்பாள்.

இது, ஆதிரையின் பெட்டி. எத்தனை பொருள்கள் பாருங்களேன்!



சேர்த்து வைத்தவை பற்றி எழுதி வைப்பது ஆதிரையின் வழக்கம்.




இதுபோல நீங்களும் சேகரிப்பது உண்டா? அவற்றைப் பற்றியும் எழுதலாமே!




2nd Std - Tamil Term 2 Updated 31.07.2020.indd 16    01-08-2020 12.29.51 PM

## ஆறு வேறுபாடுகளைக் கண்டுபிடித்து வட்டமிடுக






## உற்றுநோக்கு → சேர் → உருவாக்கு



**சேர்ப்போம்**
**உருவாக்குவோம்**




**பல்வேறு உருவங்களை உருவாக்கி மகிழுங்கள்**



2nd Std - Tamil Term 2 Updated 31.07.2020.indd 17 01-08-2020 12.29.52 PM

# குட்டிக்குரங்கின் ஒருநாள்...

















வேரில் பழுத்த பெரிய பலா
வேண்டும் அளவு தின்றிடுவேன்



குளத்தின் குளிர்ந்த நீரிலே
குதித்து விளையாடிடுவேன்






அம்மா என்னைத் தேடும் முன்னே
விரைந்து ஓடிச் சேர்ந்திடுவேன்



2nd Std - Tamil Term 2 Updated 31.07.2020.indd 19
01-08-2020 12.29.55 PM